[23rd February 1961

Tea and coffee

* 389 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—

1960-ல் நமது ராஜ்யத்தில் பாக்கு, தேயிலை, காப்பி, ரப்பர் முதலியவை எத்தனை ஏக்கரா உள்ளன—ஜில்லாவாரியாக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The particulars for the year 1959–60 are not available. A statement [a] showing the districtwise figures of the area under these crops in the Madras State during the year 1958–59, is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : பெரிய அளவுக்கு லாபமும், அந்நிய நாட்டுச் செலாவணியைப் பெற்றுத் தரக்கூடியதுமான ஒரு தொழிலாக இருக்கக்கூடிய இந்தப் பாக்குத் தொழிலையும், ரப்பர் வளர்க்கக்கூடிய தொழிலையும் சர்க்கார் எடுத்து நடத்த உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காரே எடுத்து நடத்த உத்தேசமில்லை. ரப்பர் பயிரிடுவதைப் பொறுத்தவரையில், சர்க்கார் ஓரளவுக்கு இதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த நான்கு திட்டங்களையும் மேலும் அதிகப்படியாக விஸ்தரிப்பதற்கான திட்டம் ஏதாவது உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மேலும் இதை விஸ்தரிக்கப்படுவதைப்பற்றி அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

SRI T. T. DANIEL : May I know, Sir, whether the Government have got any scheme for rejuvenating the vast acres of abandoned tea and coffee estates in the transferred territory ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that there is no such specific scheme now as is referred to by the hon. Member.

Gallantry awards

* 410 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வீரச்செயல் செய்கிறவர்களைப் பாராட்டி அரசாங்கம் பரிசு வழங்குகிறதா ?

---

a Printed as Appendix I on page 387 infra.